கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றியம் நாவலூர், சாத்தநத்தம், சிறுமுளை, பெருமுளை புலிவலம் ஆகிய கிராமங்களின்பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாவலூரில் ரூபாய் 7.53 லட்சம் மதிப்பீட்டில் புதிய தரைப்பாலம் அமைக்கும் பணியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்தார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர். வீர. அமிர்தலிங்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா. செங்குட்டுவன் கே.என்.டி. சங்கர், சேதுராமன், மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

18–ஆம் தேதி அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

கொளத்தூர் தொகுதியில் புதிய திட்டப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 18.12.2025 அன்று வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைக்கப்படவுள்ள பணிகளான ரூ.11.17 கோடி திட்ட மதிப்பீட்டில் கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியையும் மற்றும் ரூ.6.30 கோடி திட்ட மதிப்பீட்டில் கொளத்தூர், பொரியார் நகர் அமுதம் அங்காடியையும் நேற்று (12.12.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 18.12.2025 அன்று திறக்கப்படவுள்ள கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையின் இறுதிக் கட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், கடந்த 14.11.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள கொளத்தூர், பொரியார் நகர் "முதல்வர் படைப்பகத்தையும்." பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுவரும் பெரியார் அரசு மருத்

துவமனை வளாகத்திலுள்ள புறகாவல் நிலையத்தின் (Police Outpost) கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் எ.நாகராஜன், திருமதி.ஸ்ரீதணி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளிதரன், மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் சொக்கலிங்கம், செயற் பொறியாளர் சதீஷ்குமார் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மேயர் க.வசந்தகுமாரி – துணை மேயர் கோ.காமராஜ் – வே.கருணாநிதி பங்கேற்பு!

பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, டிச.13-

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 12 .12. 2025, வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் எஸ்.எஸ்.மஹால், பம்மலில் பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கே.சந்திரன் தலைமை வகித்தார். திருநீர்மலை த.ஜெயகுமார் வரவேற்புரைற்றினார்.

மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, க.சுந்தர மூர்த்தி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, சி.பார்த்தசாரதி, ஞா.பிரபு, பி.கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ. கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

இதில் மேயர் திருமதி க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் மண்டலத் தலைவர் வே.கருணாநிதி இரா.நரேஷ்கண்ணா, ப.அன்பழகன், க.மோகன், மு.நி. தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜய குமார், சித்ரா தமிழ் குமரன், சண்முகசுந்தரி ஜெய குமார், சித்ராதேவி முரளிதரன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பி.எல்.ஏ.2-வினர் கலந்து கொண்ட னர். மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எ.செந்தில்குமார், ஆர்.முரளிதரன், சி.பி.வினோத் குமார் ஆகியோர் நன்றி கூறினர்.

இக்கூட்டத்தில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி, டிசம்பர் 14 திருவண்ணாமலை இளைஞர் அணி மண்டல மாநாடு குறித்து ஆலோசிக்கப்பட்டது.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, 78–ல் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

1.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று திட்டப் பணிகள்!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., அடிக்கல் நாட்டினார்!

சென்னை,டிச.13

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77 மற்றும் 78இல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

தொகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தரும் விதமாக வார்டு எண்.77, டிமலஸ் சாலை, புளியந்தோப்பில் உள்ள கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் 46.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் உடற்பயிற்சி கூடம் கட்டும் பணி;

வார்டு எண்.77, புளியந்தோப்பு, பேசின் யானை கவுனி சாலையில் உள்ள சுந்தரபுரம் மாநகராட்சி விளையாட்டுத் திடலில் 37.30 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை ஆடுகளம் அமைக்கும் பணி;

வார்டு எண்.78, சூளை, வீ.வீ.கோவில் தெருவில் 37.70 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ரேஷன் கடை கட்டும் பணி ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டிக் கட்டுமானப் பணிகளைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்தார்.

"வார்டு எண்.78, சூளை, வீ.வீ.கோவில் தெருவில் ரேஷன் கடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின், ஆனந்தகிருஷ்ணன் தெருவிலும் மற்றும் டிமலஸ் சாலை சந்திப்பிலும் தற்பொழுது தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வரும் இரண்டு அமுதம் நியாயவிலைக் கடைகளும் இடம் மாற்றம் செய்யப்படும். இதனால் ஏ.பி. ரோடு, வீ.வீ.கோவில் தெரு, ஆனந்தகிருஷ்ணன் தெரு, அங்காளம்மன் கோவில் குடிசைப் பகுதி, பெரிய தம்பி தெரு, டி.கே. முதலி தெரு, ஆண்டியப்பன் தெரு, ஆறுமுத்து தெரு, ஆலத்தூர் சுப்பிரமணி தெரு, ஆவடி சீனிவாசன் தெரு உள்ளிட்ட தெருக்களில் வசித்துவரும் குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுவார்கள்" எனச் சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மு.கமலக்கண்ணன், மா.காந்தி; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77வது வட்டத் துணைச் செயலாளர் வீ.கே. ரவி, அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல். சுகுமாரன்; 108 'அ' வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 77வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வி.மகாதேவன், ச.சதீஷ்; 77 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச. சூர்யா; 78வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏ.வேலன், அ. ஜெகன்; 58வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே.பா.ரோஹித்குமார், 58 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தி.ராஜகுமார், 61வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ர.நித்திஷ் கிரிதரன்; 99வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தெ.திவாகரன், பகுதிப் பிரதிநிதி முனுசாமி, எழும்பூர் தெற்குப் பகுதி ஆதி திராவிட நலக்குழு முன்னாள் துணை அமைப்பாளர் ஜி.சுந்தர்ராஜன், முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், தேவநிதி, நாகராஜ், சரவணன், கோமகன், கார்த்திகேயன், வழக்கறிஞர் தர்மதுரை, சி.பன்னீர் செல்வம், ராஜேஷ், பாக முகவர் கவிதா, அசினா பேகம், சத்யகலா, சுப்பராயன், கவிதாசன், பி.பாளையம், முருகன் பார்த்திபன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள்;

தமிழ்நாடு ப்ரோஃபஷனல் பாக்ஸிங் அசோசியேஷன் தலைவர் எம்.பக்தவச்சலு மற்றும் அசோசியேஷன் உறுப்பினர்கள் கே.ஜி.சண்முகம், தணிகாசலம், மோகன், ராஜேந்திரன், கே.எல். மகேஷ், ஐ.சி.எஃப். மதிவாணன், ஜானகிராமன், இருபாளையம் பார்த்திபன், உதவி ஆய்வாளர் மாரியப்பன், துரை, ஸ்டீபன், எம்.ஜி.நித்திஸ்வரன், அரசு;

கே.பி.பார்க் இளையநிலா கேரம் குழுவைச் சேர்ந்த சங்கீதராமன், தமிழ்மணி, சசிக்குமார், கனல், சுந்தர், தனுஸ், மாறன், பிரேம்குமார், கலிங்கராயன், ராவன், கபிலன், விஜி, பாலாஜி, கிஷோர், எழிலன், மனோ, ஏழுமலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாவலர் கடவூர் மணிமாறன் இயற்றிய

'தெற்கே முழங்கும் திராவிடம்' - கவிதைத் தொகுப்பு!

பேராசிரியர் மா.செல்வராசன் தலைமையில் – பேராசிரியர் சுப.வீரபாண்டியன் இன்று வெளியிடுகிறார்!

சென்னை, டிச. 13 -

பாவலர் கடவூர் மணிமாறன் இயற்றிய 'தெற்கே முழங்கும் திராவிடம்' கவிதைத் தொகுப்பினை பேராசிரியர் மா.செல்வ ராசன் தலைமையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிடுகிறார்!

அதன் விவரம் வருமாறு:

தனித்தமிழ் இயக்கத்தின் தனிச் சிறப்புப் பாவலர், பாவேந்தர் பாரதிதாசன் பெரும்பற்றாளர், தமிழகம் அறிந்த தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவர் கடவூர் மணிமாறன் எழுபது நூல்களுக்கு மேல் இயற்றியவர் . அவரது 'தெற்கே முழங்கும் திராவிடம்' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா, சென்னை பெரியார் திடல் மணியம்மை அரங்கில் இன்று (13.12.2025 - சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளது!

வெளியீட்டு விழாவிற்குச் சென்னைப் பல்கலைக்கழக இக்காலத் தமிழ் இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் தலைமை தாங்குகின்றார்.

கருவூர் மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் ப.குமாரசாமி முன்னிலை யில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகின்றார்.

முதல் படியை மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் பொன்.செல்வகணபதி பெற்றுக்கொண்டு உரையாற்றுகின்றார்.

மேலும் முனைவர் வி. பொ.பா.தமிழ்ப்பாவை, இரா.உமா, தி.பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்

வெ.அறிவுக்கண்ணன் வரவேற்பு நல்க, முனைவர் கனிமொழி நிகழ்வுரை தர, இராம. சந்திரசேகரன் நன்றி நவில நூலாசிரியர் பாவலர் மணிமாறன் ஏற்புரையாற்றுகிறார்.

ஆர்வலர்கள் வருகை தருமாறு திராவிட இயக்கத் தமிழர் பேரவை அழைக்கின்றது.

தாம்பரம் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலம்3 அமைந்துள்ள 39,வது வட்டத்தில் உள்ள நியாய விலை கடையில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திடீர் ஆய்வு மேற்கொண்டு பொது மக்களிடம் அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ்,மாமன்ற உறுப்பினர் கிரிஜாசந்திரன் மற்றும் கழக தோழர்களும் பொது மக்களும் உடனிருந்தனர்.

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எழிலன் நாகநாதன் - வினோத் வேலாயுதம் - சைதை சாதிக் பங்கேற்பு!

109 'அ' வட்டத்தில் - "என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி" கூட்டம்!

வட்டச் செயலாளர் ச.டேவிட் இன்பராஜ் அறிக்கை!

சென்னை, டிச.13-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 109 (அ) வட்டச் செயலாளர் ச.டேவிட் இன்ப ராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் அமைந்துள்ள 109 (அ) வட்டத்தில் உள்ள BLA-2 மற்றும் BLC ஆகியோர்களுக்கு பாகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி என் வாக்குச்சாவடி! வெற்றி வாக்குச்சாவடி! 109 (அ) வட்டத்தில் பாகம் 28, 29, 30, 31, 32 ஆகிய பாகங்களுக்கு கூட்டம் 109 'அ' வட்ட செயலாளர் ச. டேவிட் இன்பராஜ் தலைமையில் இன்று (13.12.2025 - சனிக்கிழமை) மாலை 7.00 மணியளவில் சென்னை, சூளைமேடு, பஜனை கோவில் 4வது தெரு, எண். 12/27 என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், தேர்தல் பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

எனவே 109 (அ) வட்டத்திற்கு உட்பட்ட BLA2 மற்றும் BLC மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 109 (அ) வட்டச் செயலாளர் ச.டேவிட் இன்பராஜ் அறிக்கை விடுத்துள்ளார்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதி 50வது வார்டுக்கு உட்பட்ட பனைமரத்தொட்டி பகுதியில், இராயபுரம் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருத்து, ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய நியாய விலைக் கடை பணிகளை, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் சுரேஷ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், மாநகராட்சி அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட திருவெற்றியூர் மேற்கு பகுதியில் அவைத் தலைவர் ந.திருசங்கு முன்னிலையில் 1 வட்ட கழக செயலாளர் மு.சிவக்குமார் எம்.சி. தலைமையில் 1வது வட்ட உட்பட்ட சத்தியவாணி முத்து நகர் 65 பாகம் முகவர் மோ.அன்பழகன் ஏற்பாட்டில் 65 பாகத்தில் உள்ள பொதுமக்கள் மத்தியில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குசாவடி தெருமுனை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டம், பகுதி, வட்டம், கழக நிர்வாகிகள் என்.சக்கரவர்த்தி , ஜி.முரளி, என்.சொந்தராஜன், ஆர்.சசிகலா , வி.ரவி, ஜெ.சரவணன், ஆர். ஆறுமுகம் , ஆர்.கண்ணன், வி.அறிவொளி , எம்.குனசீலன் ஆனந்தன், பாஸ்கர் சரவணன், ரா.சதீஷ், ரா. தேசப்பன் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட 26 மாற்றுத்திறனாளிகளுக்கு

மூன்று சக்கர வாகனம் - மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ வழங்கினார்!

திருவள்ளூர், டிச.15:

திருவள்ளூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாற்றத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருந்திய மூன்று சக்கர வாகனம் வழங்கும் நிகழ்ச்சியும், தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

திருவள்ளூரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் சீனிவாசன் தலைமை தாங்கினார். இதில் திருவள்ளூர் எம்எல்ஏ வி.ஜி. ராஜேந்திரன் கலந்துகொண்டு ரூ.1 லட்சத்து1800 ரூபாய் மதிப்பீட்டில் 26 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 26 லட்சத்து 46 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்திய மூன்று சக்கர மோட்டார் சைக்கிளை வழங்கினார். மேலும் 15 மாற்றுத்திறனாளிகளுக்கு 95 ஆயிரத்து 385 ரூபாய் மதிப்பீட்டில் தையல் இயந்திரமும் வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் அனைவருக்கும் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வரும் நிலையில் மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கையை ஏற்று திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் 26 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டதாகவும். இதனால் மாற்றுத்திறனாளிகள் வீட்டிலேயே முடங்கி கிடக்காமல் சொந்தமாக தொழில் செய்து சாதிக்க வேண்டும் என வி.ஜி. ராஜேந்திரன் பேசும் போது தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து திருவள்ளூர், ராஜாஜி சாலையில் உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 160 மாணவ, மாணவியர்களுக்கும், பெருமாள் செட்டி தெருவில் உள்ள கமுந சகோதரர்கள் நகராட்சி மேல்நிலை பள்ளியில் பயிலும் 88 மாணவ, மாணவிகளுக்கும், விடையூரில் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளி பயிலும் 72 மாணவ, மாணவியர்களுக்கும் திருவள்ளூர் தொகுதி எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதமலர் பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டப் பிரதிநிதி

கே.வி.சுதர்சன் சகோதரர் இளையராஜா 16ஆம் நாள் நினைவு படத்திறப்பு !

கழகத்தினர் அஞ்சலி !

சென்னை டிச:13

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் 135வது வட்டம் கழக முன்னாடி கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் பகுதி மகளிர் அணி அமைப்பாளர் வீரமணி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மகனும்,சென்னை தென்மேற்கு மாவட்டப் பிரதிநிதி கே.வி.சுதர்சன் அவர்களின் சகோதரருமான கே.வி.இளையராஜா அவர்கள் 30.11.2025 அன்று மறைவெய்தினார்.

அன்னாரின் 16ஆம் நினைவு நாள் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணி அளவில் அசோக் நகர்,புதூர் 11வது தெரு எண் 25ல் நடைபெறுகிறது.

இதில் கழகத்தினர் மற்றும் உறவினர்கள் பங்கேற்று அன்னாரின் நினைவை போற்றுகின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜோதி பழனிசாமி

டிசம்பர் 13 (2010)

இருபத்தைந்து ஆண்டுகள் தாராபுரம் நகரக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியவர்.

தாராபுரம் நகர்மன்ற உறுப்பினராகவும், தாராபுரம் நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், நிலவள வங்கித் தலைவராகவும் பணியாற்றி மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி நிலை காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.